### சமூகநீதிப் போராளி

# திவான் பகதூர் திராவிட மணி - இரட்டை மலை சீனிவாசன் பிறந்தநாள்!

## தி.மு.க. சார்பில் துணை மேயர் மு.மகேஷ்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஜூலை 8 -

சமூகநீதிப் போராளி - திவான் பகதூர் திராவிட மணி, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - பெருநகர சென்னை மாநகர துணை மேயருமான மு. மகேஷ்குமார் மலர்மாலை அணிவித்து மரியாதை.

சமூகநீதிப் போராளி, திவான் பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான நேற்று (07-07-2026), காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அன்னாரின் மணிமண்டபத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயருமான மதிப்பிற்குரிய திரு. மு.மகேஷ்குமார் அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



சமூகநீதிப் போராளி திவான் பகதூர் திராவிட மணி, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – பெருநகர சென்னை மாநகர துணை மேயருமான மு.மகேஷ்குமார் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் திரு. இரா.துரைராஜ், வட்டச் செயலாளர்கள் சைதை ஆ.வரதன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஜெ.சலாம், என்.பாபு, மாவட்டத் துணை அமைப்பாளர் எ.கௌதமன், வட்டத் து.செயலாளர் எஸ்.ராஜா, பொருளாளர் ஏ.கே.என். உதயகுமார், பகுதிப் பிரதிநிதிகள் சூரியன் பிரபு, ஆம்பூர் ரவி, கழக தாமு, அ.ரிஷிகுமார் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

# பேராசிரியர் முனைவர் சு.கிருஷ்ணசாமி இல்லத் திருமண வரவேற்பு!

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!





சென்னை, ஜூலை 8 -

கழக செயல்பாட்டாளரும், திராவிட இயக்க ஆய்வாளரும், தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் செயலருமான பேராசிரியர் முனைவர் சு.கிருஷ்ணசாமி, திருமதி. க.புவனேஸ்வரி இளநிலை நிர்வாக அலுவலர் (ஓய்வு), சுகாதாரத்துறை, தமிழ்நாடு அரசு தம்பதியினரின் மகன் கி.பரத் சூர்யா - க.மனோசித்ரா இவர்களின் திருமண வரவேற்பு 04.07.2026 சனிக்கிழமை மாலை சென்னை மதுரவாயலில் உள்ள எஸ்.பி.பி. கார்டன் திருமண அரங்கில் கழகத் தலைவர் அவர்களின் நல் வாழ்த்துக்களுடன், கழக பொருளாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர், டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த திருமண வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் வேங்கடபதி, தமிழ்நாடு அரசு முன்னாள் அமைச்சர் மா. சுப்பிர மணியன், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் அமைச்சர் சா.மு.ஆவடி நாசர், முன்னாள் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, தலைமைக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மீ.அ. வைத்திய லிங்கம், இ.கருணாநிதி, கிருஷ்ணசாமி, எம்.கே. மோகன், பரந்தாமன், ஜோசப் சாமுவேல், காரம்பாக்கம் கணபதி மற்றும் அரசு உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள், தாளாளர்கள், திரை கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

இன்னிசை கச்சேரியுடன் விழா இனிதே நடைபெற்றது.

### மெரினாவில் மண்ணில் புதைந்த மரப்பாதை!

# அரசு உரிய கவனம் எடுத்து சரி செய்ய வேண்டும்!

## கழக மாற்றுத்திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 8 -

மெரினாவில் மாற்றுத் திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட மரப்பாதை பராமரிப்பு இல்லாமல் மண்ணில் புதைந்ததாக செய்தி வந்துள்ளது. இதன்மீது அரசு உரிய கவனம் செலுத்தி சரி செய்ய வேண்டும் என்று கழக மாற்றுத் திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தியுள்ளார்.

கழக மாற்றுத் திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காலம் காலமாக இயற்கையின் சுவடு அனுபவிக்காமல் இருந்த ஒரு சமூகத்திற்கு கடல் அலைகளின் ஸ்பரிசம் பெற உதவிய இந்த அற்புதமான முன்னெடுப்பு இப்படி மண்ணில் புதைவதை பார்த்துக் கொண்டு இருக்கவே முடியாது!

கடலும் கடல் அழகும் வானமும் வையகமும் எங்கள் மாற்றுத் திறனாளி தோழர்களுக்கும் சமம் என்பதை இந்த அரசு அறியுமா?

கடைநிலையில் இருப்பவருக்கு கடைத்தேற்றம் அளிக்கும் சமூகநீதி இந்த அரசில் காணாமல் போய் விட்டதோ என்கிற ஐயம் எழும்புகிறது!

மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016 கீழ் இவைகளை சரியாகப் பராமரிப்பது அரசின் கடமை.

மாற்றுத்திறனாளி ஒருவருக்கு சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார, விஷயங்களானவை, தனித்துவப்படுத்துவதாலோ (*Distinction*) நிராகரிப்பாதாலோ (*Rejection*) அல்லது வெளியேற்றுவதாலும் (*Exclusion*) கிடைக்க முடியாமல் அவன் மனித உரிமை பாதிக்குமே ஆனால் அது பாகுபாடு (*Discrimination*) என்று ஆழமான வரையறையை கொடுத்திருக்கிறது. இந்நிலையில் ஒரு மாற்றுத் திறனாளி வெகுஜன மனிதரோடு பயணிக்கின்ற சூழலில் தடை ஏற்படுமாயின், அதற்கான பிரத்தியேக சில முன்னெடுப்புகளை (*Reasonable accommodation*) எடுக்காமல் இருந்தால் அதுவும் பாகுபாடு என்று பாகுபாட்டை விஸ்தரிப்பு செய்து உரிமை குரலாக எழுப்பி இருக்கிறது எங்களது சட்டம்.

இதை இங்கே ஆழமாக பதிவதற்கான காரணம் இதன் மீது இந்த அரசு உரிய கவனம் எடுத்து உடனடியாக இதை சரி செய்ய வேண்டும். இதை பராமரிப்போர் யாராக இருந்தாலும் சரியாக பராமரிக்க வேண்டும் என்ற உரிமைக் குரலாக இங்கே பதிவு செய்வதற்காக தான் என்பதை எம் அன்பு தோழர்களுக்கும் தமிழக அரசுக்கும் தெரிவிப்பதற்கேயாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மும்பையில் நிலச்சரிவு!

மும்பை, ஜூலை.8–

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை மற்றும் புனே இடையேயான மலைப்பாதையில் நேற்று முன்தினம் பெய்த அதி தீவிர கனமழை காரணமாக திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், தண்டவாளங்களில் பெரும் பாறைகள் உருண்டு விழுந்ததால் இரு நகரங்களுக்கு இடையேயான ரயில் மற்றும் சாலை போக்குவரத்து சேவை முற்றிலும் துண்டிக்கப்பட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

இந்த இக்கட்டான சூழ்நிலை குறித்து ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேரில் ஆய்வு செய்து, ‘மும்பை மற்றும் புனே மலைப்பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டு, ரயில் தண்டவாளங்களில் பாறைகள் விழுந்ததால் உருவான தற்போதைய நிலைமையை ஆய்வு செய்துள்ளேன். சீரமைப்பு பணிகளில் மீட்புக் குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதால், ரயில் சேவைகளை விரைவாக மீட்டெடுக்க மேற்கு மற்றும் மத்திய ரயில்வே அதிகாரிகள் இணைந்து ஒரே குழுவாக செயல்படுமாறு அறிவுறுத்தியுள்ளேன்’ என்று கூறினார்.

மத்திய ரயில்வே மண் டலத்தின் கர்ஜத் மற்றும் லோனாவாலா இடையேயான தென்கிழக்கு மலைப் பாதையில் உள்ள தாக்கூர் வாடி மற்றும் மங்கி ஹில் லூப் கேபின் இடையே ஏற்பட்ட இந்த நிலச்சரிவால் துலே எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 16 ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும், அகமதாபாத்–கோலாப்பூர் எக்ஸ்பிரஸ், சென்னை எக்மோர்–சிஎஸ்எம்டி மெயில் உள்ளிட்ட பல தொலை தூர ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டன. உள்ளூர் மின்சார ரயில்கள் வழக்கம் போல் இயக்கப்பட்டாலும், முதன்மை வழித்தடத்தில் 6 முதல் 8 நிமிடங்களும், துறைமுக வழித் தடத்தில் 4 நிமிடங்களும் தாமதமாக இயக்கப்பட்டன.

இதேபோல், மும்பை – புனே அதிவேக நெடுஞ்சா லையில் உள்ள கண்டாலா வெளியேறும் பகுதிக்கு அருகே உள்ள மிஸ்சிங் லிங்க் பகுதியில் ஏற்பட்ட பெரிய நிலச்சரிவால் சாலைப் போக்குவரத்தும் முடங்கியது. பாதுகாப்பு காரணங்களுக்காக அதிகாலை 4 மணி முதல் வாகனங்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டதாக மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகம் தெரிவித்துள்ளதுடன், நெடுஞ்சாலை போக்குவரத்து போலீசாருடன் இணைந்து நிலைமையை கண்காணித்து வருவதாக தெரிவித்தது.

ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதால் மும்பையின் புகழ்பெற்ற டப்பாவாலாக்கள் தங்களது உணவு விநியோக சேவையை தற்காலிகமாக நிறுத்தினர். மாவட்ட தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், பொதுமக்கள் தங்களது பயணங்களை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

# கேரளா வயநாடு மாவட்டத்தின் பல இடங்களில் நிலச்சரிவு!

## 5 பேர் பலி – உடல்கள் மீட்பு!



வயநாடு, ஜூலை 8-

கேரளாவில் வயநாட்டில் பெய்த கனமழை காரண மாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் பலியாகினர். மேலும் காணாமல் போன 5 தொழிலாளர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் பெய்து வரும் அதி தீவிர கனமழை காரணமாக, மேப்பாடி மற்றும் கல்லாடி பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மலப்புரம் வயநாடு ஆகிய மாவட்டங்களை இணைக்கும் அதி நவீன சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. அப்போது பணியில் ஈடுபட்டிருந்த தொழிலா ளர்கள் பலர் மண்ணுக்குள் புதைந்தனர். கனமழை காரணமாக இடுக்கி மாவட்டத்தில், கொச்சி தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மூணாறு பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு, சுற்றுலா பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### மாதவரத்தில் பேருந்து நிழற்குடைகளில் இருந்த

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - சாதனைகள் பொறித்த படம் அகற்றம்!

## புழல் எம்.நாராயணன் தலைமையில் தி.மு.க.வினர் அதிகாரிகளுடன் வாக்குவாதம்!

மாதவரம், ஜூலை 8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணலி மண்டலம் 2 பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகள் 15, 16, 17, 19 ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பேருந்துநிழற்குடைகளில், திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் படங்களையும் அதிகாரிகள் அகற்றி வருகின்றனர். இதற்கு கழக நிர்வாகிகள் கடும் கண்டனம் தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 15, 16, 17,19 ஆகிய வார்டுகளில் உள்ள முக்கிய சந்திப்புகளில் திராவிட மாடல் அரசில் பேருந்து நிழற்குடைகள் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கவுன்சிலர்கள் வார்டு மேம்பாட்டு நிதியில் அமைக்கப்பட்டது. இந்த நிழற்குடைகள் அமைக்கப்பட்ட இடங்களில் பொதுமக்கள் மழைக் காலங்களிலும், கடுமையான வெயில்களிலும் இதை பயன்படுத்தி வந்தனர். இந்த பேருந்து நிழற்குடைகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகளான மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், நான் முதல்வன், தமிழ் புதல்வன், இல்லம் தேடி கல்வி, உங்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்களுடன் முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படங்களும் பொருத்தப்பட்டிருந்தது.

கவுன்சிலர்களுடைய பதவிக்காலம் இன்னும் மாத கணக்கில் இருக்கும் நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அவசர கதியில் இந்த விளம்பரங்களையும், முன்னாள் முதலமைச்சர் கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் படங்களையும் அகற்றி வருகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் பல லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடைகளில் உள்ள கம்பிகளை சிதைக்கும் வகையிலும் வெட்டி எடுத்து சேதப்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் பழி வாங்கும் நோக்கத்துடன் முன்னாள் முதல்வரின் திட்டங்கள் குறித்த விளம்பர பலகையை அகற்ற சென்னை மாநகராட்சி அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு அகற்றி வருவதை அறிந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 16 வது வட்ட செயலாளர் இ.கண்ணப்பன், பகுதி துணை செயலாளர் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார், பா. சந்திரன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விக்னேஷ் உள்ளிட்ட கழகத்தினர், 16வது வார்டு ஆண்டாள் குப்பத்தில் உள்ள பேருந்து நிறுத்தம் அருகே சென்று நிழற்குடையை அகற்றிக் கொண்டு இருந்த உதவி பொறியாளர் மற்றும் மாநகராட்சி ஊழியர்களுடன் அகற்றுவதை நிறுத்த கோரிக்கை வைத்தனர்.

ஆனால் உதவி பொறியாளர் தனக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதால் இதை அகற்றி தான் ஆக வேண்டும் என்று விடாப்பிடியாக அகற்றும் பணியில் ஈடுபட்டார். கவுன்சிலர்கள் பதவிக்காலம் முடிய இன்னும் பல மாதங்கள் இருக்கும் நிலையில் அவர்களது நிதியில் கட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்தில் உள்ள விளம்பர பலகையை அவசர கதியில் அகற்றுவதால் மக்களின் வரிப்பணம் வீணாகதோடு, அரசியல் காழ் புணர்ச்சியாக உள்ளது என்று அதிகாரிகளுடன் நிர்வாகிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் உதவி பொறியாளர் உயர் அதிகாரிகளின் உத்தரவு எங்களால் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்க முடியாது என்று பதில் அளித்தார். திமுக அரசின் சாதனைகளை மறைக்கும் விதத்தில், முன்னாள் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் படத்தை அகற்றிய, அதிகாரிகளின் இந்த செயல் தொடர்ந்தால் தொண்டர்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என்று அதிகாரிகளிடம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையிலான திமுகவினர் தெரிவித்தனர். ஆனாலும் திமுகவினரின் எதிர்ப்பை மீறியும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பதவிக்காலம் முடிவதற்கு முன்பே கவுன்சிலர்கள் மேம்பாட்டு நிதியில் வைக்கப்பட்ட பேருந்து நிழல் குடைகளில் பொருத்தப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் படங்களும் திராவிட மாடல அரசின் சாதனைகளும் அகற்றப்பட்டு வருகின்றது.

மேலும் இதுபோன்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகாரிகளின் செயல்களை பொதுமக்களும் ஒன்று கூடி கண்டித்தனர்.




மாதவரம் சட்டமன்றத் தொகுதி 16வது வட்டம் ஆண்டார்குப்பம் பகுதியில் உள்ள மாநகராட்சி பேருந்து நிழற்குடையில் உள்ள முன்னாள் முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் படம் மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி இருந்த விளம்பரங்கள் மாநகராட்சி அதிகாரிகளால் அகற்றப்பட்ட போது மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சென்று அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் படங்களை அகற்றக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். உடன் வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், கே. சிவசங்கரன், எலந்தனூர் வி. சிவ பிரகாஷ், விக்னேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.வி. சக்கரை மைதீன்

**ஜூலை 8 (1987)**



தனது இளமை காலந்தொட்டே தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு கொள்கையை பரப்பி வந்த இவர், கழகம் துவங்கியபோதே அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

பட்டிதொட்டியெங்கும் கழகக் கொள்கைகளை பிரச்சாரம் செய்த இவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் வட்டச் செயலாளராக பணியாற்றினார்.

இவரது கழகப் பணியினை போற்றும் வண்ணம் கோவையில் நடைபெற்ற மாநாட்டு அரங்கிற்கு இவரது பெயர் வைக்கப்பட்டது.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**